**ஏப்ரல் - 5**

**"என் வாய் ஆனந்தக்களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும். என் படுக்கையின் மேல் நான் உம்மை நினைக்கும்போது, இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன்." -சங் 63 : 5, 6**

ஜெபம் ஒரு சலுகை மாத்திரமல்ல, அது ஒரு அவசியமும் கூட, நமது கிறிஸ்தவ வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானதாகக் கட்டளையிடப்பட்டிருக்கிறது. யாராகிலும் நன்றி செலுத்தவும், தொழுதுகொள்ளவும், இரக்கங்களின் பிதாவுடன் பேசவும் இருக்கிற ஆசையை இழந்தால், புத்திர சுவிகாரத்தின் ஆவியையே இழந்து கொண்டிருக்கிறான் என்று நிச்சயமாயிருக்கலாம். உடனடியாக உலகம், மாம்சம் அல்லது பிசாசு ஆகிய இவைகள் அடங்கிய அந்தத் தடையைத் தேடி அகற்ற வேண்டும். அவருடைய குணத்தையும், திட்டத்தையும் நமக்கு வெளிப்படுத்தினதினால், கிடைத்திருக்கிற நம்மிலுள்ள ஒவ்வொரு கூடுதலான கர்த்தரின் நம்பிக்கையின் சான்றும், நம்முடைய ஆராதனைகளும் ஜெபங்களும் குறைவதிலிருந்து அவைகளை அதிகரிக்கச் செய்யும். நம்முடைய இருதயங்கள் நல்ல நிலமாயிருந்தால் அவைகள் மிகவும் ஏராளமான கனிகளைக் கொடுக்கும். **-Z ’96, 161 (R 2004)**

யாராகிலும் கிறிஸ்துவுக்குப் பிரதிநிதியாகக் காரியம் நடப்பிக்கிறவன், சந்தோஷமுள்ள போதனைகளை வெளிப்படையாகத் தெரியப்படுத்துகிறான். ஏனென்றால், தேவனுடைய நித்திய நோக்கம் எல்லோருக்கும் ஆசிர்வாதம் நிறைந்ததாக இருக்கிறது. பிதாவின் மீது கௌரவத்தைப் பிரதிபலிக்கச் செய்து, அவருடைய ஞானத்தையும், நீதியையும், அன்பையும், வல்லமையையும் பிரதியட்ஷமாக்குகிறது. படுக்கையைப்போல, சத்தியத்தின் மேல் இளைப்பாறிக் கொண்டு, துன்பகாலங்களில் தேவனுடைய இரக்கங்களை சிந்தனை செய்துகொண்டு, கிறிஸ்தவன் கர்த்தரின் ஏற்பாட்டை வெளிப்படையாகத் தெரியப்படுத்தலாம். அதன் மூலமாக பிதாவின் குணத்தைப் போற்றிப் புகழலாம். கர்த்தரின் வார்த்தையை வெளிப்படையாகத் தெரியப்படுத்துவதிலுள்ள முக்கியமான நோக்கம், நம்முடைய பிதாவும், தேவனுமாகிய யேகோவா எவ்வளவு போற்றத்தக்கவர் என்று மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். **-P ’34, 36.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

லேவி 7:12; சங் 34:1; 50:14,23; 69:30,31; 107:22; 116:17; 119:97; ஏசா 63:7; ஓசி 14:2; எபே 5:19,20; கொலோ 3:17; பிலி 4:6; 1தெச 5:18; 2தெச 1:3; 1பேது 2:5; 4:11.

**கோபுர வாசிப்பு : Z’15, 311 (R 5785).**

**வினாக்கள் :** இந்த வாரம் என்னுடைய தியானமும் பேச்சும், தேவனுடைய வசனத்தையும், அவருடைய குணத்தையும் பற்றியதாக இருந்ததா? எந்தெந்தச் சந்தர்ப்பங்களில்? பலன்கள் என்ன?